**கூடுதல் மகளிர் நீதிமன்றம், இராமநாதபுரம்**

**முன்னிலை : திருமதி. S. கேத்ரின் ஜெப சகுந்தலா, BCA.,LLB(Hons).,LLM.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, இராமநாதபுரம்.**
**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**கூடுதல் மகளிர் நீதிமன்றம்,**
**இராமநாதபுரம்.**

**2026 ஆம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**Cr.M.P. No. 77/2026**

**in**

**Cr.No. 213/2026 Bazaar PS**

**TNRM12-000131-2026**

விக்னேஷ், (வயது 32/2026)
த/பெ.சித்தார்தன்,
33/1, வனசங்கரி அம்மன் கோவில் தெரு,
இராமநாதபுரம்,
இராமநாதபுரம் தாலுகா,
இராமநாதபுரம் மாவட்டம்.

. . . மனுதார்/எதிரி

-/எதிர்/-

அரசுக்காக சார்பு ஆய்வாளர் அவர்கள்,
பஜார் காவல் நிலையம்,
இராமநாதபுரம்.
குற்ற எண். 213/2026
U/s. 4 of TNPHW Act,
115(2), 296(b), 324(2), 351(3) BNS

. . . எதிர்மனுதாரர் / அரசு
குற்றமுறையிடுபவர்

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்ககோரி BNSS பிரிவு 480-ன்கீழ் 22.05.2026 அன்று தாக்கல்

செய்யப்பட்ட இப்பிணை மனு இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர்/எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.அஜய்குமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/அரசு குற்ற முறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–2 அவர்களின் பதில் மனு தாக்கல் செய்தும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

<u>உத்தரவு</u>

1. இந்த மனுதாரர்/எதிரி மீது பஜார் காவல் நிலைய குற்ற எண்.213/2026, சட்டப்பிரிவுகள் 4 of TNPHW Act, 115(2), 296(b), 324(2), 351(3) BNS ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் :–</u>

இந்த மனுதாரர்/எதிரி மீது பஜார் காவல் நிலைய குற்ற எண்.213/2026, சட்டப்பிரிவுகள் 4 of TNPHW Act, 115(2), 296(b), 324(2), 351(3) BNS ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்த மனுதாரர்/எதிரி கடந்த 21.05.2026 ம் தேதியன்று கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் இந்த மனுதாரர்/எதிரி எவ்வித குற்றமும் செய்யாதவர் என்றும், மனுதாரர்/எதிரி கடந்த 6 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்த வருகிறார் என்றும் வாதிட்டார். மேலும், மனுதாரர்/எதிரி சாட்சிகளை கலைக்கவோ, தலைமறைவாகவோ மாட்டார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும் பட்சத்தில் நீதிமன்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு நடப்பார் என்று வாதிட்டார். மேலும், எதிரிக்கு பிணையம் அளிக்க பிணையதாரர்கள் தயாராக உள்ளார்கள் என்றும் மனுதாரர்/எதிரியை பிணையில் விட கேட்டுக்கொண்டுள்ளார் என்று வாதிடப்பட்டது.

3. **<u>அரசுத்தரப்பு பதிலுரையின் சுருக்கம் :–</u>**

இந்த மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணை மனுவின் பேரில் அரசுத்தரப்பிற்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. அந்த பதிலுரையில், எதிரியை பிணையில் விட்டால் இதுபோன்ற குற்றச்செயல்களில் தொடர்ந்து ஈடுபடக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்கக்கூடும் என்பதாலும், நீதிமன்ற விசாரணையின்போது ஆஜராகாமல் தலைமறைவாகக் கூடும் என்பதாலும், எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. **<u>தீர்வு :–</u>**

இவ்வழக்கில் மனு மற்றும் வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. இவ்வழக்கின் ஆவணங்கள் மற்றும் அரசுத்தரப்பு ஆட்சேபணைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும் பொழுது, மனுதாரர்/எதிரி கடந்த 21.05.2026 ம் தேதி முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார் என தெரியவருகிறது. மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை பெரும்பகுதி முடிவு பெற்றுள்ளதையும், மேலும் மனுதாரர்/எதிரி சிறையில் இருந்த காலத்தை கருத்தில் கொண்டும், மேற்படி மனுதாரர்/எதிரியின் குடும்ப பொருளாதார சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரியை பிணையில் விடுவதால் புலன் விசாரணை எந்த வகையிலும் பாதிக்காது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

1. மனுதாரர்/எதிரி ரூ.10000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)க்கும், அதே தொகைக்கு இரண்டு நபர்களுடனும் பிணைமுறியை இந்நீதிமன்றத்தில் எழுதிக்கொடுக்க வேண்டும்.

2. ஜாமீன்தாரர்களின் புகைப்படங்கள் மற்றும் இடது கட்டைவிரல் பதிவை ஜாமீன் பத்திரத்தில் அவர்களின் தொலைபேசி

எண்ணையும் இணைக்க வேண்டும் மற்றும் அவர்களின் அடையாளத்தினை உறுதிப்படுத்த அவர்களின் ஆதார் அட்டை அல்லது வங்கி பாஸ் புத்தகத்தின் நகலை இணைக்க வேண்டும்.

3. மனுதாரர்/எதிரி உத்தரவான நாளில் இருந்து ஒரு மாதத்திற்கு தினமும் காலை 10.30 மணிக்கு மட்டும் தவறாமல் பஜார் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி கையெழுத்திட்டு வர வேண்டும்.

4. மனுதாரர்/எதிரி வழக்கு விசாரணைக்கு எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது, விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும், புகார்தாரரிடமோ, அவரை சேர்ந்தவர்களிடமோ, சாட்சிகளிடமோ, எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்றும், விசாரணைக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் எந்த செயலையும் செய்யக்கூடாது என்றும் உத்தரவிடப்படுகிறது.

5. வேறு குற்ற செயல்களில் ஈடுபடுக்கூடாது.

6. அழைக்கும்போது நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும்.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 26.05.2026 ல் அவையறிய பகரப்பட்டது.

CATHRENE JEBA SAKUNTHALA S

Digitally signed by CATHRENE JEBA SAKUNTHALA S
Date: 2026.05.26 12:34:04 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ)
கூடுதல் மகளிர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்.